1970 செப்டம்பர் 3]

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. பொ. சி. அவர்கள் அந்த வினாவைத் தான் எழுப்பினார்கள். 'டைடில்' என்றிருப்பதை 'டிக்ரி'யாக மாற்றவேண்டுமானால் அதற்குச் சில விதிமுறைகளையும், தகுதிகளையும் பல்கலைக்கழகம் வகுத்திருக்கின்றது. அந்த அடிப்படையில் தான் டிக்ரி வழங்க முடியும். நான்காண்டுகள் படித்திருக்கிறார்கள் என்ற ஒரு காரணத்தினாலேயே டிக்ரியாக்க வேண்டுமென்றால் அதற்கு விதிமுறை இடம் தருவதில்லை; பல்கலைக் கழகம்தான் ஆராய வேண்டும். அகடெமிச் கவுன்சில், சின்டிகேட் போன்றவைதான் அது பற்றி முடிவு எடுக்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள்.

தமிழ் கல்லூரி மாணவர்களுக்கு உதவித்தொகை.

*211. வினா—புலவர் பொ. பொன்னம்பலம்: மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை அளிப்பாரா—

(அ) தனித் தமிழ் கல்லூரியில் பயிலும் மாணாக்கரில் இத்துணைப் பேருக்குத்தான் மாநில அரசினர் உதவித் தொகை கொடுக்கப்பட வேண்டும் என்று வரையறுக்கப்பட்டுள்ளதா?

(இ) ஆமெனில், எவ்வாண்டிலிருந்து? எவ்வளவு?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(இ) இத்திட்டம் கடந்த பல ஆண்டுகளாகச் செயலிலிருந்து வருகிறது. ஒவ்வோர் ஆண்டும் வழங்கப்பட்ட படிப்பு உதவித் தொகை வருமாறு:—

பாடமுறை.	படிப்பு உதவித்தொகைகளின் எண்ணிக்கை.	திங்கள் ஒன்றுக்கு உதவித் தொகை.
		ரூபாய்.
வித்துவான்	13	6
சிரோன்மணி	6	6
மகளிர்க்கான சிறப்புப் படிப்பு உதவித் தொகைகள்.	2	15

புலவர் பொ. பொன்னம்பலம்: தலைவர் அவர்களே, பேரவைத் தலைவர் அவர்களே, தனித் தமிழ்க் கல்லூரியில் பயிலும் மாணவர்களுக்கு இருக்கக்கூடிய வரையறையை எடுத்துவிட்டு, தகுதியுடைய அனைவருக்கும் உதவித்தொகை வழங்க அரசு முற்படுமா, உதவித் தொகையைக் கொஞ்சம் கூடுதலாக வழங்கவும் அரசு ஆலோசிக்குமா என்று அறிய விழைகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, இப்பொழுது அப்படிப்பட்ட உத்தேசம் இல்லை.

திரு. ஆர். கருப்பையா: தலைவர் அவர்களே, எஸ்.எஸ்.எல்.சி. படிப்பை முடித்துவிட்டு, அதற்குப் பிறகு நான்காண்டுகள் கலைக் கல்லூரியில் டிக்ரி படிப்புப் படிக்கிறார்கள். அதுபோல்தான் தமிழ்க் கல்லூரியிலும் நான்கு ஆண்டுகள் 'புலவர்' படிப்புப் படிக்கிறார்கள். கலைக்கல்லூரியில் படிக்கிறவர்களுக்கு ஆண்டொன்

றுக்கு ரூ. 400 முதல் ரூ. 500 வரை ஆகும் செலவை அரசு ஏற்றுக் கொள்ளுகிறது. இங்கே தனித்தமிழ் அரசு என்று சொல்லிக் கொண்டிருக்கும் இந்த அரசு, தமிழ்க் கல்லூரிகளில் பயிலும் பின்தங்கிய வகுப்பினருக்கும், அரிசன வகுப்பினருக்கும் ஆண்டொன்றுக்கு ரூ. 400 உதவித்தொகை கொடுக்க முன்வருமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, தனித்தமிழ் என்று சொல்வது வேறு. தமிழ் வளர வேண்டும் என்று சொல்லுவது வேறு. தமிழர்களுக்கு வாய்ப்பும் வசதியும் ஏற்படுத்தித் தருவது வேறு. தமிழை எடுத்துப் படிக்கிறவர்களுக்குத் தகுதி அடிப்படையில் கொடுக்கிற தன்மைகள் வேறு. பல்கலைக் கழகம் முடிவு எடுத்திருக்கும் வகையில், நான்காண்டுகள் புலவர் படிப்புப் படிக்கிறவர்களுக்கு இலவசமாகக் கற்றுக் கொடுக்கப் படுகிறது. புலவர் படிப்புப் படிக்கிறவர்கள் பணம் செலவு செய்ய வேண்டியதில்லை; இலவசமாகப் படிக்கிறார்கள். மற்ற கல்லூரிகளில் படிக்க வேண்டுமானால் சம்பளம் கட்டிப் படிக்க வேண்டும். புகுமுக வகுப்பிற்கு இப்பொழுது சம்பளம் இல்லாத நிலை ஏற்பட்டு இருக்கிறது. குறிப்பாக, ஊதியத் தொகையில் இருக்கும் வேறுபாட்டைக் குறித்துத் தகவல் வேண்டுமானால், தனிக் கேள்வி போட்டால் விவரங்கள் அறிந்து சொல்லவும், அதில் என்ன மாற்றம் என்பதையும் ஆராய இயலும்.

நாகப்பட்டினம் மருத்துவ மனையில் செவித்துறை கண்காணிப்பாளர் பதவி

* 212 வின.—திரு. கொ. இர. ஞானசம்பந்தன் : மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினத்திலுள்ள மாவட்ட தலைமை மருத்துவ மனையில் நர்சிங் சூப்பிரண்டெண்ட் பதவி எத்தனை நாட்களாக காலியாக உள்ளது?

(இ) அப்பதவிக்கு உடனடியாக நர்சிங் சூப்பிரண்டெண்ட் நியமிக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) 28—11—1967-லிருந்து காலியாக உள்ளது.

(இ) அப்பதவிக்கு செவிலித்துறைக் கண்காணிப்பாளரை நியமிப்பதற்கான செயற்குறிப்பு அரசின் பரிசீலனையிலிருக்கிறது. எனினும், அந்த செவிலித்துறைக் கண்காணிப்பாளரின் பணியை ஒரு முதுநிலை பெண் தலைமைச் செவிலியர் கவனித்து வருகிறார்.

திரு. கொ. இர. ஞானசம்பந்தன் : இவ்வளவு நாள் அது காலியாக இருப்பதற்குக் காரணம் என்ன? இனியாகிலும் உடனடியாக நியமிக்க அரசு அவசர உத்தரவு பிறப்பிக்குமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அந்த வேலை உருவாக்கப்பட்ட பிறகு அரசு விதிமுறைகளை வகுத்தது. விதி முறைகள் சரியல்ல என்று ரிட் பெட்டிஷன் கோர்ட்டுக்குச் சென்றது.